Nallur Branch Library

பத்தகக்கூ ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

கடக: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆடி 09 வெள்ளிக்கிழமை (24 07 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 239

தெரிவுக் குழு பிரச்சினையை ஒருபோதும் தீர்க்கமாட்டாது!

நாடாளுமன்றில் அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 24

நாடாளுமன்றத் தெரிவுக்குழு இனப் பிரச்சினையை ஒரு போதும் தீர்க்கமாட்டாது. அந்தக் குழுவில் பங்கு கொள்ளும் கட்சிகள் தமக்கு அரசியல் இலாபம் தேடவே முனைகின்றன ஆகையால் தெரிவுக்குழு மூலம் ஒரு தீர்வு கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கமுடியாது!

இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார் தகவல் துறை துணை அமைச்சர் திரு. ஏ. ஜே. ரணசிங்கா.

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான பிரேரணை மீதான விவாதம் நேற்றுச் சபையில் நடைபெற்றது. அரசாங்கத் தரப்பில் விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே துணை அமைச்சர் ரணசிங்கா ஒரு கட்டத்தில் முன்கண்ட வாறு தெரிவித்தார்.

சமஷ்டி முறைமையைத் தாம் ஆதரிப்பதாகவும் துணை அமைச்சர் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் சொன்னார்.

அவரது பேச்சு விவரம் வருமாறு:—

(6 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கில் ராணுவ நடவடிக்கை: எந்தவித மாற்றமும் இல்லை

அமைச்சர் ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 24

வடக்கில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள படையினரைத் திரை திருப்பும் ஒரு நடவடிக்கையாகவே கிழக்கில் தாக்குதல்கள் நடாத்தப்படுகின்றன. இதற்கு அரசு இடம் கொடுக்காது. வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் இராணுவ நடவடிக்கைகளில் தற்சமயம் மாற்றம் ஏதும் இல்லை. அந்த இராணுவ நடவடிக்கை தொடரும்

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்க வகை செய்யும் பிரேரணை மீதான விவாதத்துக்கு அரச தரப்பில் பதில் அளித்துப் பேசுகையில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இந்தப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் 61 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அமைச்சர் வீரசிங்க மல்லிமராட்சி அங்கு பேசுகையில்—

வடக்கு - கிழக்கு யுத்தி (6 ஆம் பக்கம் பார்க்க)

வட-கிழக்கு தமிழர் தாயகம்; சகலரும் அதை ஏற்க வேண்டும்

காமினி திஸநாயக்கா சொல்கிறார்

கொழும்பு, ஜூலை 24

நாம் விரும்புகிறோமோ இல்லையோ, வடக்கு-கிழக்கு, தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசமாகத்தான் இருந்திருக்கிறது. நாம் ஏன் அதனை ஏற்றுக்கொள்ளக் கூடாது நான் அதனை ஏற்றுக்கொள்கிறேன்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் முன்னாள் அமைச்சரும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உப தலைவருமான திரு. காமினி திசநாயக்கா.

கொழும்பிலிருந்து வெளிவரும் ''சரிநிகர்'' தமிழ் மாத இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் முன்கண்டவாறு கூறியுள்ளார்:

வடக்கு - கிழக்கு தமிழ் சிங்கள மற்றும் சிறுபான்மை மையினர் ஆகியோருக்கிடையேயான இனச் சம நிலையை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட பலவந்தமான குடி

(6 ஆம் பக்கம் பார்க்க)

கடந்த ஐந்து மாத காலத்தில்

3,364 சிங்களக் குடும்பங்கள் மணலாறில் குடியேற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மணலாறு மாவட்டத்தில் கடந்த ஜனவரி முதல் மே வரையான ஐந்து மாத காலப் பகுதியில் ஸ்ரீலங்கா அரசு திட்டமிட்டு 3 ஆயிரத்து 364 சிங்களக் குடும்பங்களை குடியமர்த்தியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

வெளிநாடுகளில் இருந்து ஸ்ரீலங்கா அரசு பெற்றுக் கொள்ளும் நிதி உதவிகளில் பெரும் பகுதி, மணலாற்றில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை மேற்கொள்ளவே பயன்படுத்தப்பட்டுவது.

பாதிக்கப்பட்ட தமிழர்களின் புனர்வாழ்வுக்கென பல வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்கிய நிதியும் குடியேற்ற நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

தமிழீழத்தை இரண்டாகப் பிரிக்கும் நோக்குடனே ஸ்ரீலங்கா அரசு அங்கு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்தி வருகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

வழிபாட்டுத் தலங்கள் படையினரால் ஆக்கிரமிப்பு

தென் தமிழீழத்தில் உள்ள தமிழ் மக்களின் வழிபாட்டுத் தலங்கள் அழிக்கப்பட்டும் அவை படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டும் வருவதாக தகவல் தெரிவிக்கின்றன.

கடந்த ஆறுமாத காலத்தில் 50 க்கும் மேற்பட்ட கிறீஸ்தவ இந்து மத வழிபாட்டுத் தலங்கள் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன என்றும்—

வாழைச்சேனை, வாகரை, சொறிக்கல்முனை ஆகிய இடங்களில் உள்ள தேவாலயங்களும் இவற்றுள் அடங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

எழுதுநர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வர்த்தமானி விவரம் கிடைத்துள்ளது

யாழ்ப்பாணம், ஜூலை 24

எழுதுநர் சேவைக்கும் அதனோடு இணைந்த சேவைகளுக்கும் ஆட்களைச் சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான அறிவித்தல் 17-7-1992 வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அரசசேவை, அரச கூட்டுத்தாபன சேவை, மாகாண சபை ஆகியவற்றுக்கு எழுதுநர்கள், சிறாப்பர்கள், களஞ்சியக் காப்பாளர்கள், ரயில் நிலைய அதிபர்கள், ரயில்வேத் திணைக்களக் காவலர்கள் மற்றும் பல பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும். இப் பதவிகளுக்கு மொத்தம் 3,500 பேரைச் சேர்ப்பதற்கு முடிவாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

ஜி. சீ. ஈ. சாதாரண தரம் அல்லது தே. பொ. க. சா. (எஸ். கி. ஜி. ஈ.) பரீட்சை

(6 ஆம் பக்கம் பார்க்க)

ஷெல் வீச்சுக்கு ஏழாலை வாசி காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 24

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 10.30 மணிக்கு ஏழாலைப் பகுதியை நோக்கி ஏவப்பட்ட ஷெல்லினால் ஒருவர் காயமடைந்தார் - மூன்று வீடுகள் பலத்த சேதமடைந்தன.

ஏழாலை மேற்கில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் வீட்டு முன்பகுதியில் படுத்திருந்த பாலசிங்கம் பாஸ்கரன் (வயது 26) என்ற இளைஞனே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஒ-15)

'பரா' வெளிச்சத்தில் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜூலை 24

மண்டைதீவுப் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் இரவும், நேற்று அதிகாலையும் இராணுவத்தினர் கரையோரப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

கடந்த சில நாட்களாக 'பரா' வெளிச்சத்தின் உதவியுடன் ஷெல், துப்பாக்கித் தாக்குதல்களை படையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஒ 5)

கொழும்புக்கு 284 பேருடன் வந்த விமானத்தில் தீ!

பம்பாயில் அவசரமாக தரையிறக்கம்

கொழும்பு, ஜூலை 24

சுவிற்சர்லாந்து — மியூனிச் நகரில் இருந்து கொழும்புக்கு 284 பயணிகளுடன் வந்து கொண்டிருந்த 767 போயிங் ரக விமானத்தில் திடீரென புகை கிளம்பியதால், அந்த விமானம் அவசர அவசரமாக பம்பாயில் தரையிறக்கப்பட்டது. கடந்த சனிக்கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சொந்தமான அந்த விமானம் பம்பாயை நெருங்கிக் கொண்டிருந்த சமயம் ''என்ஜின்'' அருகில் இருந்து பெரும் புகை கிளம்பியதைத் தொடர்ந்து தரையிறக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அதிகாரிகள் சோதனை நடாத்தியதில் ''குளிரூட்டி''ப் பகுதியில் கோளாறு இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

போலந்து நாட்டுக்குச்

(ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தாண்டித் தாக்குதல்:

காணாமல் போனவர்களை கண்டுபிடிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 24

சித்தாண்டியில் கடந்த செவ்வாய்க்கிழமை ரயில் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது பலர் காணாமல் போய் விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

தாக்குதலில் உயிரிழந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் தவிர காணாமல் போன ஏனையவர்களை கண்டு பிடித்து உதவும்படி நீதி, உயர்கல்வி அமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீது, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்காவைக் கோரியுள்ளார்.

இதேவேளை —

கிழக்கில் உள்ள முஸ்லிம்கள் மீதான தாக்குதலை ஒரு மாயசக்தி தூண்டிக் கொண்டிருக்கின்றது என்று கிழக்கு மாகாண எம். பி. ஒருவர் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இம் மாயசக்தியை இனங்காண வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (த-எ)

காணாமற் போனோர் குடும்பத்துக்கு நட்டஈடு வழங்க முடியாத நிலை

புனர்வாழ்வு அமைச்சர் கைவிரிப்பு

கொழும்பு, ஜூலை 24

தென்னிலங்கையில் ஜே. வி. பி. கிளர்ச்சிகள் நடந்த சமயம் காணாமற் போனவர்களின் குடும்பத்திற்கு நட்டஈடு வழங்க முடியாதிருக்கிறது என புனர்வாழ்வு, சமூகநலத்துறை அமைச்சர் பி. தயாரத்தினா தெரிவித்தார்.

காணாமற் போய் மரண மானவர்களாகக் கருதப்படுவோருக்கு மரணச் சான்றிதழ்கள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் மரண சான்றிதழை சமர்ப்பித்தாலும் அவர்களுக்கு நட்டஈடு வழங்குவது பிரச்சனையாக உள்ளது. இதற்கு சுமார் 100 கோடி ரூபா தேவைப்படுகிறது.

மேலும், இப்படியானவர்கள் தீவிரவாதிகள் எனப் பொலிஸார் அறிவித்திருந்தால் அவர்களுக்கு நட்டஈடு கொடுக்க முடியாது

இப்படி அமைச்சர் தெரிவித்தார். இதுவரை சுமார் 5 ஆயிரம் பேருக்கு நட்டஈடாக 25 கோடி ரூபா வழங்கப்பட்டிருப்பதாக புனர்வாழ்வு, சமூக நல அமைச்சின் பதிவேடுகளில் காணப்படுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-10)

நெடுந்தீவுக்கு திரும்பிச் செல்ல முடியாத 65 பேருக்கு நிவாரணம் வழங்க முடிவு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நெடுந்தீவில் இருந்து யாழ்ப்பாணம் வந்து திரும்பிச்செல்ல முடியாத 65 பேருக்கும் நிவாரணம் வழங்க செயலக புனர்வாழ்வுப் பிரிவு அனுமதி வழங்கியுள்ளது.

ஒரு வருடத்துக்கு மேலாக இங்கு தங்கியுள்ள இவர்கள் மீளவும் நெடுந்தீவுக்கு செல்ல முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணம் புங்குடுதீவு ப. தோ. கூ. சங்கத்தில் வழங்கப்படவிருக்கிறது. (ஒ-3)

31ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

கெலன் யோகராணி ஞானராசா

[வல்லை மின்தறி நிலைய ஆசிரியை]

தோற்றம்: 30 — 09 — 1948

மறைவு: 24 — 06 — 1992

எம்மை விட்டு அன்று போன எமது அன்புத் தெய்வமே! மாதம் ஒன்று போனாலும், பண்பின் பிறப்பிடமான உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலா.

உங்கள் ஆத்மா சாந்தியெற நாம் என்றென்றும் பிரார்த்திக்கின்றோம். அன்னாரின் 31ஆம் நாள் நினைவாக இன்று இல்லத்தில் 24-07-1992 வெள்ளிக்கிழமை நடைபெறும் கிரியைகளில் பங்குபற்றுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்;

கணவர்: ஞானராசா,
தாய்: வி. நேசமணி,
சகோதரி: வி. லாலி,
சகோதரர், மாமன், மைத்துனிமார், மைத்துனர், மருமக்கள்.

ஸ்ரூடியோ வீதி,
அச்சுவேலி மேற்கு, அச்வேலி. [சி-2764]

உற்சவங்கள்

வடமராட்சி, ஜூலை 24

பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறும். [ஒ-165]

★ ★ ★

சுழிபுரம், ஜூலை 24

வழக்கம்பரை முத்துமாரியம்மன் சங்காபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை பகல் வேளை சிறப்பாக நடைபெறவுள்ளது. [ஒ-28]

★ ★ ★

கொழும்புத்துறை, ஜூலை 24

கொழும்புத்துறை கிழக்கு வசந்தபுரம் புனித யாகப்பர் ஆலய வருடாந்தக் கொடியேற்ற உற்சவம் நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற உள்ளது.

எதிர் வரும் திங்கட்கிழமை மாலை திருப்பலி பூசை, திருச்சொரூபவனி என்பவற்றுடன் உற்சவம் நிறைவு பெறும். [ஒ-30]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 24

கோப்பாய் ஸ்ரீ வீரபத்திரசுவாமி கோவில் பத்திரகாளி அம்பாள் உற்சவம் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெறுகிறது.

தினமும் அபிஷேக ஆராதனைகள், யந்திரபூஜை, உள்வீதி உற்சவம் நடைபெறும். ஆடிப்பூரத் தினத்தன்று பூரகர்மம், வெளிவீதி உற்சவம் ஆகியன இடம்பெறும். [ஒ]

தங்கப் பதக்கம்

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்திலிருந்து தங்கப் பதக்கம் ஒன்று கண்டெடுக்கப்பட்டது. அத்தப் பதக்கம் இப்போது மேற்படி கல்லூரி அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தந்திரிமலை பிரதம பிக்குவுக்கு பிரேமா அஞ்சலி

கொழும்பு, ஜூலை 24

தந்திரிமலை ராஜமகா விகாரைக்கு ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுச் சென்றார்.

குண்டு வெடிப்பில் உயிரிழந்த விகாரை பிரதம குரு விமலஞான தேரரின் உடலுக்கு ஜனாதிபதி அஞ்சலி செலுத்தினார்.

குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தையும் ஜனாதிபதி அப்போது பார்வையிட்டார். (ஒ-எ)

மாடியிலிருந்து விழுந்து மரணம்!

கொழும்பு, ஜூலை 24

மாலைதீவு விமானசேவையின் பொதுமுகாமையாளரும் வர்த்தகருமான ஜனாப் இப்ராஹிம் ஜிஜி [வயது 32] கொழும்பு ஹில்டன் ஹோட்டலின் 7ஆவது மாடியில் இருந்து விழுந்து மரணமானார். கடந்த திங்கள் காலை 8-30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. [த-எ]

குளங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தனங்கிளப்பு பனங்காய் குளம், கொத்தனை வாய்க்கால் புனரமைப்பு வேலைகளும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் சங்கரத்தைக் குளம், நாவாவாரிக் குளம் புனரமைப்பு வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் குளப் புனரமைப்புத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் 9 குளங்களும், 2 வாய்க்கால்களும், சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவினுள் 3 குளங்களும் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன. [ஒ]

தீவகத்துக்கு கப்பல் மூலம் ஜெனரேட்டர், அம்புலன்ஸ்

கொழும்பு, ஜூலை 24

தீவுப் பகுதிக்கு கப்பல் மூலம் ஜெனரேட்டர், பஸ், அம்புலன்ஸ் மற்றும் பௌசர் ஆகியன அனுப்பி வைக்கப் பட்டன என்று தெரிவிக்கப் படுகின்றது:

தீவுப் பகுதிகளின் மின்சார விநியோகத்துக்கென ஐந்து ஜெனரேட்டர்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

கடந்த வாரம் விசேட கப்பல் ஒன்றின் மூலம் ஒரு பஸ்வண்டி ஓர் அம்புலன்ஸ் வண்டி, தண்ணீர் பௌசர், அரசாங்க அதிபருக்கான ஜீப் வண்டி ஆகியன அனுப்பப்பட்டன. ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய பகுதிகளில், அனுப்பி வைக்கப்பட்டுள்ள பஸ் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

புங்குடுதீவு மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்வதில் தண்ணீர் பௌசர் பயன்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது. [த-எ]

பூஸா கைதிகள் ஜனாதிபதிக்கு மகஜர்

தமது நெருங்கிய உறவினர்களின் மரணச் சடங்கில் பங்கு பற்ற தாம் அனுமதிக்கப்பட வேண்டும் என்று பூஸா முகாம் கைதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தக் கோரிக்கை தொடர்பான மகஜர் ஒன்றையும் அவர்கள் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இம் மகஜரின் பிரதிகள் எதிர்க்கட்சிகளின் இணைப்புக்குழு, மனித உரிமைகளுக்கான குழு ஆகியவற்றுக்கும், சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்கள் சிலவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (இ-10)

மானிப்பாயில் ஞாயிறன்று

கலையரசு சொர்ணலிங்கம் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

மானிப்பாய் கலையரசு கலைக்கழக நாடகப் பயிற்சிக் கல்லூரியினர் யாழ். கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் கலையரசு சொர்ணலிங்கம் நூற்றாண்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

காலை நிகழ்ச்சிகள் 9 மணிக்கு ஆரம்பமாகும். விழாவுக்கு திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் தலைமை வகிப்பார். பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் திரு. கு. குணராசாவும், சிறப்பு விருந்தினர்களாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கு. டிவகலாலா, விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் கலந்து கொள்வர்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்ச்சியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன. [ஒ-5]

நாளை

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நல்லூர் உற்சவகாலத் தொண்டர் சேவை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே. கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும். [ஒ-30]

புதிய மஞ்சத்தில் வீதி உலா

கொழும்புத்துறை, ஜூலை 24

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய அலங்கார உற்சவத்தின் பன்னிரண்டாம் நாளான இன்று சுவாமி புதிய மஞ்சத்தில் வெளிவீதி உலா வருவார்; காலையில் விசேட அபிடேகமும் பூசையும் இடம் பெறும்.

நாளை பிராயச்சித்த அபிடேகம் பஞ்சமுக அர்ச்சனை ஆகியவற்றுடன் அன்னதானமும் இடம்பெறும். [அ-30]

நாட்டுக் கூத்து

கில்லாலை புனித சந்தியோகுமையோர் ஆலய வருடாந்தத் திருநாளையொட்டி யாழ். திருமறைக் கலாமன்றம் அங்கு நாட்டுக்கூத்து ஒன்றை மேடையேற்ற உள்ளது.

நாளை சனிக்கிழமை இரவு 7- மணிக்கு "யூகுமாரி" என்னும் நாட்டுக்கூத்தைக் கலாமன்றம் மேடையேற்றும் (இ-51)

தார் அனுப்புமாறு கோரிக்கை

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட வீதிகளை திருத்த தேவையான தார் 'பரல்'கள் 250ஐ கப்பலில் அனுப்புமாறு யாழ். மாநகரசபை ஆணையாளர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்தைக் கோரியுள்ளார். [ஒ-3]

மாவீரர் நினைவு மண்டப திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூலை 24

மாவீரர் நினைவு மண்டபத் திறப்பு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 4:00 மணிக்கு நாவாந்துறை சிற்றம்பலம் நகரில் [றீகன்] நடைபெறும்.

யாழ். மாவட்டத் தளபதி திரு. செல்வராஜா நினைவு மண்டபத்தைத் திறந்து வைப்பார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கொடியை ஏற்றி வைப்பார். மட்டக்களப்பு — அம்பாறை தொடர்பகப் பொறுப்பாளர் திரு. அருணகிரி மங்கள விளக்கேற்றுவார்;

யாழ். கடற் புலிகள் தளபதி திரு. கங்கையமரன் மாவீரர்களுக்கு தீபமேற்றுவார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் இந்த விழாவில் உரை நிகழ்த்த உள்ளனர்.

குருநாகலில் நினைவுத் தூபி

குருநாகல், ஜூலை 24

வடக்கு - கிழக்கு யுத்தத்தில் மரணமடைந்த வடமேற்கு மாகாணத்தைச் சேர்ந்த இராணுவத்தினரின் நினைவாக குருநாகலில் நினைவுத் தூபி ஒன்று எழுப்பப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம் பெற்றது. [ஒ-10]

கருத்தரங்கு

"புதிய வழிபாட்டு முறை— ஒரு பரிசீலனை" என்ற தலைப்பிலான இறை மக்கள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு பரி. யோவான் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

அருட்கலாநிதி ஜசக் ஹென்றி றிக்கர், அருட்திரு ஈ. ஜே. ஜெபரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்தவுள்ளார்கள். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Noolaham Foundation Noolaham Branch Library

கொழும்பிலிருந்து

சவர்க்காரம், ம.எண்ணெய் கப்பலில் எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 24

அடுத்த மாதம் முதல் வாரத்தில் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படும் "குமண" கப்பலில் மண்ணெண்ணெய், தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் போன்றவையும் எடுத்து வர கொழும்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறியவந்தது.

கொழும்பில் தற்போது தங்கியிருக்கும் யாழ். அரச அதிபர் இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அறிவிக்கப்பட்டது.

இப் பொருள்களை அனுப்ப கூட்டுப்படைத் தலைமையகத்திடம் அனுமதி கோரப்பட்டுள்ளதாக, அரச அதிபர் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைத்துள்ள தகவலில் தெரிவித்துள்ளார்.

இதே வேளை —

தற்போது கொழும்பிற்தரித்து நிற்கும் குமண கப்பலில் அரிசி, மா, சீனி ஆகிய அத்தியாவசிய பொருள்கள் ஏற்றப்பட்டு வருவதாகவும்—

கூட்டுப்படைத் தலைமையகத்தின் அனுமதி கிடைத்தும் ஏனைய பொருள்களுடன் ஏற்றப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

[த-3]

தந்திரிமலை குண்டு வெடிப்பு:

புலன் விசாரணை நடத்த உயர்மட்டக் குழு விரைவு

கொழும்பு, ஜூலை 24

கடந்த செவ்வாய்க்கிழமை அநுராதபுரம் தந்திரிமலையில் கிரனேட் குண்டு ஒன்று வெடித்து அங்குள்ள பௌத்த விகாரை பிரதம குரு மரணமான சம்பவம் குறித்து புலன் விசாரணை நடத்த குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் நிலைக்குழு ஒன்றும் அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளரும் தந்திரிமலை ரஜமஹாவிகாரைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளனர்.

பாதுகாப்பு வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன.

இக் குண்டு வெடிப்புத் தொடர்பாக விசாரணை நடத்த அரச உத்தரவிட்டதும் —

ஏற்கனவே இப்பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலீஸ்மா அதிபரும், சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளும் சம்பவம் நடந்த இடத்தில் விசாரணை நடத்தி வருவதும் தெரிந்ததே.

[த-எ]

விலை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 24

நெஸ்லே நிறுவனம் அடுத்த வாரத்தில் இருந்து தமது உற்பத்தியான சகல ரக பால்மா வகைகளின் விலைகளை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளன.

கண்டி மன்னனின் வாரிசு சென்னையில் காலமானார்

கண்டியின் கடைசி மன்னன் விக்கிரம ராஜசிங்கனின் நேரடி வழித் தோன்றலான கண்டி ஸ்ரீ சுக்கு ராஜசிங்கன் கடந்த ஞாயிற்றுக்கிழமை சென்னைக்கு அருகில் உள்ள ஆவடியில் காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது.

[த-எ]

G.A.Q/1st in Com.
1992/1993

பேராதனை, யாழ். பல்கலைக்கழகங்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விவரங்களையும், நேர அட்டவணையையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி.
S. அருள்நங்கை.

புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். [சி-2941]

விண்ணப்பப் படிவம்

வர்த்தமானியில் குறிப்பிட்ட அளவில் இனியோபாஸ் [தூய வெள்ளை] தாளில் அச்சிடப்பட்ட

★ எழுதுநர் பதவி
★ தட்டெழுத்தாளர் பதவி
★ சுருக்கெழுத்தாளர் பதவி

போன்றவற்றிற்கான விண்ணப்பப் படிவங்கள் நாளை சனிக்கிழமை முதல் விற்பனைக்கு வரும்.

மேலதிக விவரங்களுக்கு:

அருண் பிறிண்டேர்ஸ் அன் பப்பிளிசேர்ஸ்
இல. 15, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
[சி-2942]

யாழ். வர்த்தகர் சங்கம்

விசேட பொதுக் கூட்டம்

இன்று 24 - 07 - 1992 யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற இருந்த கூட்டம் பின்போடப்பட்டுள்ளது.

தலைவர்.

(சி-2763)

சுதுமலை

சிந்மய பாரதி வித்தியாலயம்
பழைய மாணவர் சங்க
அங்குரார்ப்பணம்

மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணம் 02 - 08 - 1992 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது 18 வயதுக்கு மேற்பட்ட பழைய மாணவர்கள் அனைவரும், தற்போதைய ஆசிரியர்களும் சமுகமளித்து இச்சங்கத்தினை அமைக்க ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

ஜெ. கிருஷ்ணசாமி
அதிபர்

23 - 07 - 1992
(5194)

முதலாவது பிறந்த தின வாழ்த்து

★ செல்வன் பசீலன் ★

ஸ்ரீநாரத வித்தியாலய வீதி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சிவலிங்கம்-அமுதமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் டீலன் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (24-07-1992) தனது இல்லத்தில் மிக விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா, அப்பப்பாமார், அப்பம்மாமார், அம்மப்பாமார், அம்மம்மாமார், பிரான்சில் வசிக்கும் பெரியமாமா, நவம் அப்பப்பா குடும்பம், இரத்தினம் அம்மப்பா குடும்பம், சுவிசில் வசிக்கும் குகன்மாமா, இராசன் மாமா, நாதன் மாமா, வாசன் மாமா, மோகன் மாமா, நேசன் அத்தான், ரகுச்சித்தப்பா, இலங்கை சித்தப்பா, ஜேர்மனியில் வசிக்கும் தெய்வேந்திரம் பெரியப்பா, குணாச்சித்தப்பா, தருமு அப்பப்பா குடும்பம், சுவிஸில் வசிக்கும் குலம் சித்தப்பா, உதயம் அன்ரி குடும்பம், அவுஸ்திரேலியாவில் வசிக்கும் யஜிச்சித்தப்பா, சூரி போதயம் பெரியப்பா, இராசரத்தினம் பெரியப்பா குடும்பம், ஆழ்வாப்பிள்ளை பெரியப்பா குடும்பம், பஞ்சன் சித்தப்பா குடும்பம், சிவஞானம் சித்தப்பா குடும்பம், சேகர் மாமா குடும்பம், மூத்தமாமா குடும்பம், பிருந்தா அக்கா, மிலிலர் அண்ணா, குணதர்ஷன் மச்சான், தவதர்சினி, தவலோஜினி, தவஜர்சினி, தவராகினி, சற்சிலா மச்சாவிமார், பெரியப்பா, பெரியம்மாமார், சித்தப்பா, சித்திமார், மாமா, மாமிமார், அண்ணா, அக்காமார், மச்சான், மச்சாவிமார், தம்பி, தங்கைமார், பாட்டன், பாட்டிமார், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரும் மந்திகை அம்மன் அருளால் பல்கலையும் கற்று, நிடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

[சி2842]

BECON
Study Centre
பரதிதாசன்.

A/L 93

கணக்கியல்:

சௌந்தி

வங்கி கணக்கீனக்கக் கூற்று

ஆரம்பம்:
26—07—1992
ஞாயிறு காலை 8 மணி.
[சி-2940]

நிரு
ரியூசன் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

A/L 93

தேசிய வருமானம்

சனி ஞாயிறு } 4 - 5 மணி.

குறிப்பு: 01 - 08 - 1992 இற்கு பின்னர் வகுப்புக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

A/L 94

கேள்விக் கோட்பாடு

சனி ஞாயிறு } 5 - 6 மணி.

ஆசிரியர்:
திரு. உதயன்.

ஆரம்பம்:
26—07—1992
[சி-2939]

நல்லூர் பிரதேச சபை

கேள்வி விளம்பரம்

1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 4ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிவரை கீழே காட்டப்பட்ட வேலைகளுக்கு கேள்விகள்/கூறுவிலைகள் கோரப்படுகின்றன. அன்றையதினம் காலை 11-00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அதி தருணம் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

கேள்விக்காரர் வைப்புப்பணத்தையும், கிரயப் பணத்தையும் 31-07-1992ஆம் திகதி 12-00 மணி வரை நல்லூர் பிரதேச சபையில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு காரியாலயத்தில், காரியாலய நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

ஆ. மகாலிங்கம்.
விசேட ஆணையாளர்.

நல்லூர் பிரதேசசபை,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

இல.	வேலையின் பெயர்	மீளளிக்கப் படும் வைப்புப் பணம்	கிரயப் பணம்
1.	கிசு பரிபாலன சிகிச்சை நிலைய தளபாட விநியோகம் (திருநெல்வேலி)	250/-	100/-
2.	திருநெல்வேலி பொது நூல் நிலைய தளபாட விநியோகம்	250/-	100/-
3.	கொக்குவில் பொது நிலைய தளபாட விநியோகம்	250/-	100/-
4.	திருநெல்வேலி இந்து மயான பாதுகாப்பு வேலி தகரத்தால் அமைத்தல்	250/-	100/-
5.	குப்பை அள்ளும் வண்டில் விநியோகம்	250/-	100/-

[சி-2766]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

செல்வநாயகம் நினைவுப் பேருரை, Education & Human Right in Sri-Lanka, The First Seven Chelvanayagam Memorial Leetures & Historical Foundation of the Economy of the Tamils of North Srl - Lanka விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். [சி-2933]

தாவடி, மானிப்பாய் றோட்டில் பெரிய வீடு நாலரைப் பரப்புக்காணியில், வாங்க விரும்புபவர் நேரில் வரவும். இல. 1, செம்மணி வீதி, நல்லூர், முத்திரைச் சந்தை. [21871]

வெற்றுப் பைக்கற்றுகள்

பால்மா வெற்றுப்பைக்கற்றுகள் தொகையாகவும், சில்லறையாகவும் தேவைப்படுகின்றன. இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்; அண்ணா தொழிலகம், இணுவில். (சி-2934)

வாங்கலாம்-விற்கலாம்

நல்ல நிலையில் உள்ள மணிக்கூடுகள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். உதிரிப் பாகங்களுக்கான மணிக்கூடுகளும், றேடியோக்களும் வாங்கப்படும். மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். டிலக்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ராண்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமை) யாழ்ப்பாணம். (5187)

துர்க்கா திருமண சேவை

சகல தொழில்களிலும் மணமகன்கள் உண்டு. எல்லா மதங்களிலும் திருமணத் தொடர்பு செய்து கொடுக்கப்படும். ஜாதகம், புகைப்படத்துடன் எல்லா நாட்களிலும் தொடர்பு கொள்ளலாம். துர்க்கா திருமண சேவை, வளர்மதி இல்லம், கே. கே. எஸ். வீதி. மல்லாகம். [5183]

இலவச திருமணசேவை

31 வயது, சதயம் U.K.இல் M. Sc., Electrical Engineering படிப்பவருக்கு ஏற்ற வெளிநாடு, உள்நாடு மணப்பெண் தேவை. சகல தரங்களில் மணமக்கள் உண்டு. து. இமலாயாழ். நாச்சிமார் கோவிலடி. [5177]

சங்கீதம்

தவணைத் தேர்விலே கூடுதல் புள்ளிகளைப் பெறுவதற்கு சங்கீதம் வினா-விடை உதவுகிறது. அனைத்துப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [21823]

புலமைப்பரிசில் பரீட்சை

எம்மால் வாரந்தோறும் வெளியிடப்படும் ஆண்டு - 5 புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்களும், அரசாங்கம் நடத்திய இறுதிப் பரீட்சை வினாத்தாள்களும் விடைகளுடன் விற்பனையாகின்றன. Bond Book Stall, 58 A, ஸ்ராண்லி வீதி. யாழ்ப்பாணம். [சி-2931]

ஆண்டு 5 க்கான புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை, 1992-07-26 ஞாயிறு காலை 9-15 மணிக்கு நடைபெறும். இப்பரீட்சையின் வினா-விடை வகுப்புகள் செவ்வாய், வியாழன் கிழமைகளில் மாலை 3 30 மணிக்கு இலவசமாக நடத்தப்படும். "நாவலர், கல்வி கழகம்", நாவலர் ஒழுங்கை, ஆனைப்பந்தி. (21868)

பழைய புத்தகங்கள்

பாவித்த பழைய புத்தகங்கள், கொப்பிகள் நியாய விலையில் விற்கிற, வாங்க யாழ். பழைய புத்தகக் கடை, அருச்சுனா (ஸ்ராண்லி) வீதி, யாழ்ப்பாணம். [5193]

A/L - விலங்கியல்

93 ஆம் 94 ஆம் ஆண்டு புதிய பிரிவு விலங்கியல் வகுப்புகள் பரீட்சை நோக்குடன் வினா - விடைகளுடன் அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் கற்பிக்கப்படும். எஸ். செல்வநாயகம் B; Sc., Dip-in Ed. இணுவில் தெற்கு. (4921)

வினா - விடைகள்

G. C. E A/L, O/L மாணவர்களுக்கு கடந்த கால கணக்கியல் வர்த்தக பரீட்சை வினா - விடைகள். ஆக்கியோன்: இ. செல்வநாயகம் (B. Com.) நோயல் கல்லூரி, கிடைக்குமிடங்கள்: S. K. சாமி அன்கோ, நெல்லியடி, மண்டேவா ரேடர், மக்மிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம், கனகா புத்தகசாலை பருத்தித்துறை. [21822]

தட்டச்சு - றோனியோ

சகல விதமான தமிழ் — ஆங்கில தட்டச்சு, ஸ்ரென்சில் கட்டிங் மற்றும் றோணியோ வேலைகளை உங்கள் விருப்பம் போல் தரமான முறையில் செய்து கொள்ள நாடுங்கள் "அருண் மார்க்கெட்டிங் அன்ட் அட்வேடைசிங் சேவிசஸ்", இல. 15, 2 ஆவது ஒழுங்கை, மிசார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (இ-2909)

O/L கணிதம்

மாணவர்கள் தாமாகவே கற்றலை மேற்கொள்ளச் கிறந்த கணித நூல்கள், ஆசிரியர் ச்சிதானந்தனின் உதவி நூல் வரிசைகளாகும். மடக்கைகள், விருத்திகள், புள்ளிவிபரவியல், திரிகோண கணிதம் ஒவ்வொன்றும் ரூ 20/-. பூபாலசிங்கம், ஸ்ரீலங்கா மற்றும் புத்தகசாலைகளில். (4914)

புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை 26-07-92 ஞாயிறு மு. ப. 7. 00, மு. ப. 10. 00 நேரங்களிலும், ஆண்டு 4 பரீட்சை 01-08-92 சனி அதே நேரங்களிலும் நடைபெறும். பதிவு செய்யவும், புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [21862]

செம்மணி மயான புனருத்தாரண
திட்டமிடல் கலந்துரையாடல்

இடம்: செங்குந்த இந்துக்கல்லூரி மண்டபம்
திகதி: 26—07—1992 (ஞாயிற்றுக்கிழமை
பி. ப. 4-00 மணி)

மேற்படி மயானத்தை பாவிக்கும் மக்கள் மத்தியில் உள்ள சகல சனசமூக நிலையங்களின் உத்தியோகத்தர்களையும், கிராமசேவையாளர்களையும் நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் மற்றும் பொது ஸ்தாபன பிரதிநிதிகள், நலன் விரும்பிகள் சுவரையும் கலந்துரையாடலுக்கு சமூகமளிக்கும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

க. இராசலிங்கம், செயலாளர்.
வ. பரமசிவம், தலைவர்.

நல்லூர் லயன்ஸ் கழகம்

[21836]

யாழ். பல்கலைக்கழகம்
யாழ். பல்கலைக்கழக ஆய்வு நூல்களின் விற்பனை

யாழ். பல்கலைக்கழகம் தனது ஆய்வுகளைப் பிரசுரங்களாக வெளியிட்டு அவற்றை விற்பனை செய்து வருகின்றது. இதனடிப்படையில் பின்வரும் வெளியீடுகள் யாழ். பல்கலைக்கழக வரவேற்புப் பகுதியில் விற்பனைக்குள்ளன.

1. பண்டைய தமிழகம் — கலாநிதி எஸ். கே. சிற்றம்பலம்
   பிரதி ஒன்று ரூபா 375/-
   சாதாரண தபால் செலவு ரூபா 20/-
2. நூலகவியலில் பட்டியலாக்கம் — திருமதி வி. பாலசுந்தரம்
   பிரதி ஒன்று ரூபா 60/-
   சாதாரண தபால் செலவு ரூபா 10/-
3. வித்துவசிரோமணி கணேசையரின் வாழ்க்கையும் பணியும் — திரு. எஸ். சிவலிங்கராசா
   பிரதி ஒன்று ரூபா 30/-
   சாதாரண தபால் செலவு ரூபா 10/-

இவற்றை தபாற்கட்டளை / காசுக்கட்டளை அனுப்பி தபால் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் சாதாரண தபால் செலவை மேலதிகமாகச் செலுத்துதல் வேண்டும். தபாற் கட்டளை / காசுக் கட்டளை நிதியாளர், யாழ். பல்கலைக்கழகம் என்ற பெயரில் இருத்தல் வேண்டும். வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும். வியாபாரிகள் நிதியாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

- பதிவாளர்.

[சி-2760]

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி பொதுச்சபைக்கூட்டம் 1992-07-24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு. ப. 10-00 மணிக்குச் சங்கத் தலைவர் திரு. சு. சிவபாலன் அவர்கள் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறும். பொதுச் சபை உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

- செயலாளர்.

திருநெல்வேலி கிழக்கு. [இ-2765]

ECALOM

மனோகராச் சந்தி, யாழ்ப்பாணம்:

கணக்கியல்
திரு. A. சொந்தி
A/L 93
வங்கிக் கணக்கிணக்கக் கூற்று
ஆரம்பம்:- 25 - 07 - 92 சனி மாலை 5 மணி

A/L 94
வியாபார இலாப நட்டக் கணக்கு ஐந்தொகை
ஆரம்பம்:- 26 - 07 - 92 ஞாயிறு காலை 7 மணி

[21864]

9ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 13 — 02 — 1943
அரக்கர் அழிப்பில்: 24 — 07 — 1983

அமரர் சின்னையா சிவானந்தன்
(ரதி வாச் வேக்ஸ் - முகாமையாளர்)

உங்கள் ஆத்மா சாந்தி அடைய கடவுளை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்;
மனைவி, பிள்ளைகள் -
நிஷாந்தி, பிரசன்னா, சிந்துஜா,
மருமகன் - பாஸ்கரன்.

"நிஷாந்தி வாசா",
315/5, பலாலி வீதி,
திருநெல்வேலி. [21872]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 20 — 03 — 1929
மறைவு: 07 — 08 — 1988

திருமதி தவமணி அப்பையா

திதி: 24-07-1992

அம்மா! உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்;
கணவன், மக்கள், மருமக்கள்;
பேரப்பிள்ளைகள்.

இல. 1, புதிய செம்மணி வீதி,
சுன்னாகம்,
யாழ்ப்பாணம். (21870)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

உணருவது எப்போது?

இலங்கை இனப்பிரச்சினைக்கு சர்வதேச மத்தியஸ்தம் மூலம் தீர்வு காண்பதற்கு எடுக்கப்பட்ட ஆகப் பிந்திய முயற்சியும் தோல்வி கண்டு விட்டது. சுவீடன் நாட்டு அரசாங்கம் இது விடயத்தில் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காமற் போயிற்று!

யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இரு சாரார் இடையேயும் மத்தியஸ்தம் செய்து வைக்க சுவீடன் அரசு முன் வந்தது. தனது இந்த முடிவை அவ்வரசு விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா அரசுக்கும் உத்தியோக பூர்வமாக அறிவித்தது. சுவீடனின் மத்தியஸ்தத்தை ஏற்கத் தாம் தயாராக இருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்தனர். ஆனால் ஸ்ரீலங்கா அரசு எவ்வித பதிலும் அனுப்பாமல் அசிரத்தையாக உள்ளது. அதனால் சுவீடனின் முயற்சி பலனளிக்காமற் போய் விட்டது — என்று யாழ்ப்பாணம் வந்திருக்கும் சுவீடிஷ் பேராசிரியர் பீற்றர் ஷோக் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு - கிழக்கில் நடந்து வரும் யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவ முன் வந்த நோர்வே மனித உரிமைகள் அமைப்பு, குவாக்கர் சர்வதேச அமைப்பு ஆகியவற்றின் முன்முயற்சிகளுக்கு ஏற்பட்ட கதியே சுவீடிஷ் முயற்சிக்கும் உண்டாகியிருக்கிறது! ஆஸ்திரேலியா மற்றும் ஐரோப்பிய சமூக நாடுகள் மத்தியஸ்தம் செய்யுமாறு தம்மை அழைத்தால் அப்பணியைச் செய்யத் தயாராக இருப்பதாக அறிவித்தபோதும் அரசாங்கம் பேசாமடந்தையாக இருந்தது தெரிந்ததே!

வடக்கு-கிழக்கில், அர்த்தமற்ற போர், வீணான யுத்தம் நடப்பதாக மேடைகளில் நீலிக்கண்ணீர் வடிக்கும் ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு பேச்சுவார்த்தை என்பது ஒவ்வாமையாக (Alergic) இருக்கிறது.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது, பலவீனப்படுத்த முடியாது என்பதனை கடந்த இரண்டு வருட கால யுத்தத்தின் பின்னரும் அரசுத் தலைவரால் தெரிந்துகொள்ள முடியவில்லை என்றால் அவர் அரசாட்சி நடத்துவது எப்படி?

விடுதலைப் புலிகளை ஏன் பலவீனப்படுத்த முடியாது? அவர்களுக்குத் தமிழ் மக்களின் ஆதரவுண்டு. தமிழர்களின் பிரதிநிதிகள் அவர்கள். தமிழ் மக்கள் அவர்களின் கவசங்களாக உள்ளவர்கள். தலைவர் பிரபாகரன் இதனை 11 வருடங்களுக்கு முன் வடித்த ஒரு கவிதையில் பின் வருமாறு கூறியிருக்கிறார்:

'எமது படையணி கடக்க வேண்டியது நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்! ஆனால்... அதைத் தாங்கக் கூடிய மக்கள் ஆதரவென்னும் கவசம் எம்மிடம் உண்டு'

இலட்சிய வேட்கையுடனும், தியாக மனத்துடனும் போராடும் விடுதலைப் புலிகளை அழிப்பதென்றால் தமிழர்களைப் பூண்டோடு அழித்தால் தான் இயலும்.

ஜனாதிபதி பிரேமதாசா இந்த யதார்த்தத்தை உணர்ந்தால் சர்வதேச மத்தியஸ்தத்துடனான பேச்சுவார்த்தைக்கு உடன்படுவார். அதனை உணரும்வரை வேண்டாத விஷப் பரீட்சைகளை செய்யவே அவர் துணிவார்.

யுத்தத்துடன் சம்பந்தப்பட்டவர்களுடன் பேசினால் தான் அதனை நிறுத்த முடியும் என்பது அவருக்குத் தெரியவில்லை என்றால் அதனை என்னென்று சொல்வது?

பின்நோக்கி ஒரு பார்வை

ஒலிம்பிக் போட்டிகளை மதித்து யுத்தங்கள் கூட நிறுத்தப்பட்டன

- காந்தசாரணன் -

இருபத்தைந்தாவது ஒலிம்பிக் போட்டிகள் ஸ்பானிய துறைமுக நகரமான பார்ஸலோனாவில் நாளை ஆரம்பமாகின்றன:

ஒலிம்பிக் போட்டிகள் பண்டைய கிரீஸ் தேசத்தில் ஒரு சமயக் கொண்டாட்டமாகவே கருதப்பட்டு வந்தன.

கி. மு. 776 ஆம் ஆண்டின் பின்னர் ஒலிம்பிக் போட்டிகள் பிரதான இடம் பெற்று, ஒலிம்பியா என்னும் நகரத்தில் தொடர்ந்து நடைபெற்றன.

முதன்முதலில் ஓட்டப் பந்தயம் மட்டுமே இடம்பெற்றது. பந்தய மைதானத்தைச் சுற்றி (192.28 மீற்றர்) ஒரு தடவை ஓட வேண்டும். இதுவே போட்டி!

பின்னர் போட்டிகள் விஸ்தரிக்கப்பட்டு, அவை 5 நாட்களுக்கு நடத்தப்பட்டபோது, வேறு நிகழ்ச்சிகளும் சேர்க்கப்பட்டன.

மைதானத்தைச் சுற்றி இரண்டு தடவை ஓடும் நீண்ட தூர ஓட்டம், போர்க்கோல உடையில் ஓட்டம், குத்துச்சண்டை, ''பங்கிராஷன்'' எனப்படும் கட்டுப்பாடுகள் இல்லாத மல்யுத்தம் என்பன சேர்க்கப்பட்டன. பின்னர் குதிரை வண்டி ஓட்டம், நீளம் பாய்தல், ஈட்டி எறிதல், குண்டெறிதல், குறுகிய தூரத்தை அதிவேகமாக ஓடிக் கடத்தல், மல்யுத்தம் என்பனவும் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

பண்டைய கிரேக்கத்தில்

பண்டைய கிரேக்க மக்கள் ஒலிம்பிக் போட்டிகளுக்கு விசேட முக்கியத்துவம் கொடுத்தனர். போர் ஏதும் நடந்து கொண்டிருந்தால் போட்டிக் காலத்தின்போது போட்டிகளுக்கு மதிப்புக் கொடுத்து யோர் நிறுத்தம் கூட கடைப்பிடிக்கப்பட்டது.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு ஸீயஸ் என்னும் தெய்வத்தின் கோவிலில் வைத்து ஒலிவ் செண்டு பரிசளிக்கப்பட்டது. போட்டியில் பங்குபற்றுவதே சிறப்பானது; வெற்றிபெறுவது நோக்கமல்ல என அப்போது கருதப்பட்டது.

காலப்போக்கில் ஒலிம்பிக் கைச் சாட்டாக வைத்து ஊழல், நாடு பிடிக்கும் சம்பவங்கள் அதிகரித்தாலும், சமய நம்பிக்கை நலிவடைந்ததாலும் கி. பி. 393 ஆம் ஆண்டின் பின் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறாமல் போயின.

ஒலிம்பியா நகரம் கண்டுபிடிப்பு

வெகுகாலத்தின் பின் 19 ஆம் நூற்றாண்டில் ஜேர்மன் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் ஒலிம்பியா நகரைக் கண்டுபிடித்தபோது மீண்டும் ஒலிம்பிக் பந்தயங்களின் ஆர்வம் தலைதூக்கியது. இதற்கு முக்கிய காரணர் பிரான்ஸ் நாட்டவரான பாரொன் பியரே டீ கூபேர்டின் என்பவராவார்.

பண்டைய கிரேக்க நாட்டின் பொற்காலத்துக்கு ஒலிம்பிக் பந்தயங்களின் விளையாட்டுக் குறிக்கோளே காரணம் என அவர் உணர்ந்தார். இவற்றை தற்காலத்துக்கு மாற்றி உலகத்திலுள்ள இளம் சந்ததியினரை ஒன்று கூட்டி சிநேகபூர்வமாக போட்டிகளில் ஈடுபடவைக்க அவர் தீர்மானித்தார். ஒலிம்பிக் போட்டிகள் வகுப்பு, இனம், சமயம், அரசியல் வேறுபாடுகளைக் களைந்து சுயேச்சையாக நடைபெற வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

1894 ஆம் ஆண்டில் அவர் பாரிஸ் நகரில் மற்றும் சில பிரமுகர்களுடன் சேர்ந்து சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார் ஒலிம்பிக் போட்டிகளை நடத்துவதும், கூபேர்டின்னின் கோட்பாடுகளை முன்னெடுத்துச் செல்லப்பாடுபடுவதும் இந்தக் கமிட்டியின் பொறுப்புகள்.

நவீன ஒலிம்பிக் பந்தயங்கள் 1896 ஆம் ஆண்டு கிரீஸ் தலைநகர் ஏதென்ஸில் ஆரம்பமாயின. இதிலிருந்து ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு தடவை ஒலிம்பிக் பந்தயங்கள் உலகின் பல்வேறு நகரங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. 1916, 1940, 1944 ஆகிய ஆண்டுகளில் மட்டும் உலக யுத்தம் காரணமாக பந்தயங்கள் நடைபெறாமல் போயின.

[வளரும்]

ஒலிம்பிக் கொடி

ஒலிம்பிக் கொடியில் உள்ள 5 வளையங்களும் 5 கண்டங்களைக் குறிக்கின்றன. பந்தயங்களில் பங்கு பற்றும் சகல நாடுகளினதும் கொடிகளிலுள்ள நிறங்கள் — நீலம், மஞ்சள், கறுப்பு, பச்சை, சிவப்பு — கொண்ட இவ் வளையங்கள் நட்பைக் குறிக்கும் வகையில் ஒன்றுடன் ஒன்று பிணைந்திருக்கின்றன.

பெல்ஜியம் நாட்டிலுள்ள அன்ற்வேப் நகரில் 1920 ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் பந்தயங்களின் போது ஒலிம்பிக் கொடி முதன்முதலாக ஏற்றிவைக்கப்பட்டது.

25 ஆவது ஒலிம்பிக்ஸ் நாளை பார்சலோனாவில் ஆரம்பம்

மாணவர் பார்க்க வேண்டிய பயன் பல தரும் கண்காட்சி

யாழ். பல்கலைக்கழகத்தில் நடக்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். பல்கலைக்கழகமும் யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கமும் இணைந்து நடத்தி வரும் விஞ்ஞானக் கண்காட்சி நாளை சனிக்கிழமை மாலை 6 மணிவரை நடைபெறும்.

முதல் நாளான புதன் கிழமை யாழ். குடாநாட்டின் தூர இடங்களில் உள்ள கல்லூரிகளில் இருந்து பெரும் எண்ணிக்கையான உயர் வகுப்பு மாணவ, மாணவியர்கள் கண்காட்சிக்கு வந்திருந்தனர்.

விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம் என்று இரு பிரிவுகளாக காட்சி இடம்பெற்றது. விஞ்ஞான பீடத்தில் தாவரவியல் காட்சியறையூடாக நுழைந்து முதலில் பல்வேறுபட்ட தாவரங்களின் தன்மைகள், விதைகளின் தோற்றம், வெட்டு முகங்கள் குறித்த விளக்கங்களைப் பெறமுடிந்தது.

விலங்கியல் அறைக்குள் செல்வோரை நுழைவாயிலில் நமது மூதாதையரான குரங்கு ''ஈ..ஹி..ஹி.. மனிதன் என் மகன் தான்'' என்று வரவேற்பது குறிப்பிடத்தக்கது.

விலங்கியல், தாவரவியல், இரசாயனவியல், பௌதீகவியல், கணணி ஆகிய துறைகள் குறித்தும் —

உயிரியல் இரசாயனத் துறை, உடற்கூற்றியல், உடற்றொழிலியல், சமுதாய மருத்துவம், ஒட்டுண்ணியியல் ஆகிய துறைகள் குறித்தும் —

மாணவர்களுக்கு செயல்முறை விளக்கங்களும், விரிவுரைகளும் பல்கலைக்கழக மாணவர்களாலும், விரிவுரையாளர்களாலும் விளக்கமளிக்கப்பட்டது.

பாடசாலைகளில் ஆய்வு கூட வசதிகள் இன்மையால் மாணவர்கள் பாடங்களை மட்டுமே கற்க வேண்டியுள்ளது இங்கேயுள்ள பரிசோதனைக் கூடங்களில் மாணவர்களுக்கு செயல்முறை விளக்கங்கள் அளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால் அவர்கள் பயன் பெற முடியும் — என்று விரிவுரையாளர் ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

ஒவ்வொரு ஆய்வு கூடத்திலும் பெருந்தொகையான மாணவர்கள் தமது சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்ளக் கூடியதாக விளக்கமளிக்கப்படுவதைக் கேட்க முடிந்தது.

பாடசாலை மாணவர்கள் மட்டுமன்றி இத்துறைகளில் ஆர்வமுள்ளவர்களும், பொது மக்களும் கூட காட்சியைப் பார்க்க வருகை தந்தது குறிப்பிடத்தக்கது.

எமது மண்ணின் எதிர்கால வளர்ச்சிக்குத் தமது பங்களிப்பை நல்க வேண்டிய இன்றைய மாணவர்கள், குறிப்பாக விஞ்ஞானத்துறை, மருத்துவத்துறை சார்ந்த கல்விக்காகத் தம்மை தயார்படுத்திக் கொள்ளும் மாணவர்கள் இக் கண்காட்சியைப் பார்வையிட்டு தமது கல்விக்கு மேலும் வளமூட்ட வேண்டியது அவசியமாகிறது.

காட்சியைப் பார்வையிட்டுத் தமது சந்தேகங்களைப் போக்கிக் கொள்வதில் மாணவர்கள் காட்டும் ஆவல், எதிர்காலத்திலும் இது போன்ற பயனுள்ள கண்காட்சிகளை நடத்த பல்கலைக்கழகத்திற்கும், விஞ்ஞானச் சங்கத்திற்கும் உற்சாகமளிக்கும் என்று நம்பலாம். (அ-111)

பொன்னாலை நோக்கி ஷெல் தாக்குதல்

மூளாய், ஜூலை 24

காரைநகரில் இருந்து நேற்று முன்தினம் புதன் கிழமை இரவு 7. 30 மணியளவில் பொன்னாலை, மூளாய் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

அனேக ஷெல்கள் வயல் வெளிகளில் விழுந்து வெடித்தன. (ஒ-99)

மேலும் 10 ஆயிரம் பேர் தாயகம் திரும்ப விருப்பமாம்

சென்னை, ஜூலை 24

மேலும் பத்தாயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தஞ்சையில் அகதிகள் மறுவாழ்வுக்குப் பொறுப்பான விசேட அதிகாரி திரு. எம். இராம்தாஸ் இத்தகவலை வெளியிட்டார்.

இதுவரை 23 ஆயிரத்து 126 இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பி விட்டனர் என்றும் அவர் சொன்னார்.

அகதிகளை ஏற்றிச் செல்லும் கப்பல் பழுதுபார்க்கப்பட்டதும், அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்பி வைக்கும் வேலை மீண்டும் ஆரம்பமாகி விடும் என்று கூறியதிரு. இராம்தாஸ் — தமிழ் நாட்டில் தற்போது 150 முகாம்களில் 88 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர் என்றும் தெரிவித்தார். (த-எ)

ரெலோ இயக்கத்தினர் 6 பேர் கொழும்பில் கைது!

கொழும்பு, ஜூலை 24

மிரட்டிப் பணம் பறித்தார்கள் என்ற புகாரின் பேரில் ரெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஆறு பேர் கொழும்பு பிரதம நீதிவான் முன்னிலையில் கடந்த செவ்வாய்க் கிழமை ஆஜர் செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

புறக்கோட்டை வர்த்தகரான கதிரேசன் சுப்பிரமணியம் என்பவர் செய்த முறைப்பாட்டை அடுத்து இந்த ஆறு பேரும் கொள்ளுப்பிட்டியில் உள்ள ரெலோ அலுவலகத்திலிருந்து கைது செய்யப்பட்டனர்.

ஆட்களைக் கடத்த முயன்றார்கள் என்ற புகாரின் பேரிலும் புறக்கோட்டை வர்த்தகரிடம் பணம் பறித்தார்கள் எனற குற்றச்சாட்டின் பேரிலும் அவசரகாலச் சட்ட விதிகளின் கீழ் இவர்கள் கைது செய்யப்பட்டார்கள். [த-எ]

Digitized by Noolaham Foundation
noolaham.org/raavanahaam.org

வடக்கு - கிழக்கு இணைப்பு ஒரு புதிய சிந்தனை அல்ல

சபையில் அமைச்சர் தேவராஜ்

கொழும்பு, ஜூலை 24

"வடக்கு-கிழக்கு இணைப்பு ஒரு புதிய சிந்தனை அல்ல. அது பண்டாரநாயக்க-செல்வ நாயகம் ஒப்பந்தத்தில் கூட கூறப்பட்ட ஒரு விடயமாகும். நாட்டின் இன்றைய நிலைக்கு ஸ்ரீ.ல.சு.கட்சியோ, யு. என். பியோ காரணம் என்று கூறுவதை விட நாம் அனைவருமே அதற்குக் காரணம் என்று கூறுவதுதான் பொருத்தமானது"

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றிய இந்து சமய கலாசார ராஜாங்க அமைச்சர் பி. வி. தேவராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு — கிழக்கு நெருக்கடி நிலைமை காரணமாக அவசரகால சட்டத்தை நீடிக்க முயல்வதாக கூறப்பட்டாலும் அதனைச் சாட்டாக வைத்து கொழும்பு மாவட்டத்தில் தொழிலாளர்களின் தொழிற் சங்க உரிமைகள் பறிக்கப்படுவது அநீதியானது என்று ஐக்கிய சோசலிஷ முன்னணி எம்.பியான திரு. ராஜா கொல்லுரே தெரிவித்தார். [ஒ-5]

உயிர்மீட்சிக் கூட்டங்கள்

பரியாக்கோபு ஆலயம் நல்லூர் 164 ஆம் ஆண்டு நிறைவுவிழாவை ஒட்டி இன்று வெள்ளி முதல் மூன்று தினங்களுக்கு உயிர்மீட்சிக் கூட்டங்கள் நடைபெறும்.

வெள்ளி 24-7-92
3.45 — விசேஷ பாடல்களும் அருளுரையும்

சனி 25-7-92
காலை 8 மணி — திருமுழுக்கு ஆராதனை
9 மணி — வேதப்படிப்பு
3 மணி — பெண்களுக்கான கூட்டம்
4 மணி — பாடல்களும் அருளுரையும்

ஞாயிறு 26-7-92
காலை 7 மணி — பரிநற்கருணை வழிபாடு
8.30 மணி — ஐக்கிய போஷணம்
9.45 மணி — கருத்தரங்கு
பி.ப. 3 மணி — வாலிபர் கூட்டம்
4.15 மணி — பாடல்களும் அருளுரையும்

அருளுரைகள் அருட்தந்தை லம்பேட் அடிகளார்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சபைக்குரு
ஐசக் செல்வரத்தினம்

[21881]

மரண அறிவித்தல்கள்

தா. தங்கராசா

[ஓய்வுபெற்ற பொறுப்பதிகாரி, வலி மேற்கு பிரதேச சபை - சங்கானை பட்டின உப அலுவலகம்]

வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை ''ரத்தின வாசா'' வைச்சேர்ந்த திரு. தா. தங்கராசா அவர்கள் 22-07-92 அன்று காலமானார்.

அன்னார் தவம் அவர்களின் அன்புக் கணவரும், ஆதித்தன் [பேராதனை பல்கலைக்கழகம், கண்டி], ஆதவன் [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி] ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி மனோன்மணி நாராயணசாமி, காலஞ்சென்ற கெங்கராசா, காலஞ்சென்ற முருகேசு, கனகலிங்கம் [கொழும்பு] டாக்டர் நாகரடணம் [கொழும்பு], திருமதி தவமணி வேலுப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், மனோரஞ்சிதன் [கொழும்பு], ஜெயரஞ்சிதன் [கணக்காளர் - ஷப்றா நிறுவனம், யாழ்ப்பாணம்], திருமதி வதனா பதிமநாதன் ஆகியோரின் அன்புமைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நா. ஜெயரஞ்சிதன்
மைத்துனர்

''ரத்தின வாசா''
பங்குரு வீதி,
வட்டு கிழக்கு.

[5195]

இரத்தினம் இலட்சுமிகாந்தன்

இரத்தினம் இலட்சுமிகாந்தன் 23-07-92 நேற்று காலமானார். இவர் 'இலெக்றோலக்ஸ்', சுன்னாகம் முன்னாள் உரிமையாளரும், புஸ்பதேவியின் அன்புக் கணவரும், அப்பிகை — பொன்னம்பலப் அவர்களின் மருமகனும், உமாகாந்தன், நாகபூசனி, உருக்மணி காந்தன், கௌரிகாந்தன், ஸ்ரீகாந்தன், மீனலோசனி, பாமகாந்தன், தேவகாந்தன், கமலகாந்தன் ஆகியோரின் சகோதரரும், பாலசுப்பிரமணியம், கனகரத்தினம், நந்தகுமார், பத்மாதேவி, கலாதேவி, உமாமகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணிக்கு ஏழாலை மேற்கில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. உமாகாந்தன்
புவனா றேடேர்ஸ்,
சுன்னாகம்.

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.
23-7-92

[சி/2488]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 24-07-92 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெற்று வரும் விஞ்ஞானக் கண்காட்சி நாளை சனிக்கிழமை மாலை 6 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நாளை பிற்பகல் ஒரு மணி வரை மட்டுமே அனுமதிச் சீட்டுக்கள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. [ஒ-111]

வார இறுதி ஆட்டங்கள் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

நவாலி வளர்மதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இவ்வார இறுதிக்கான ஆட்டங்கள் நடைபெறமாட்டா என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அவை பிறிதொரு திகதியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது [உ]

சரத்பவார் சீனா விஜயம்

பீகிங், ஜூலை 24

இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் ஐந்து நாள் உத்தியோக பயணம் ஒன்றை மேற்கொண்டு இன்று வெள்ளிக்கிழமை சீனாவுக்குப் பயணமாகின்றார்.

அவருடன் இந்தியாவின் முப்படைகளின் உயர் அதிகாரிகளும் மற்றும் பாதுகாப்பு அமைச்சு உயர் நிலை அதிகாரிகளும் செல்கின்றனர். [ஒ-எ]

வட கிழக்கு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யேற்ற (Forced Colonisation) நடைபெறுவதை நான் எனது வாழ்க்கையின் இந்தக் கட்டத்தில் எதிர்க்கிறேன்.

ஆனால் பெரும்பான்மை இனத்தவர் ஒருவர் வடக்கு-கிழக்கில் குடியேறி வாழமுடியாது என்ற நிலைப்பாட்டை எடுக்க முடியாது. அதே போல தமிழ் மக்கள் சிங்களப் பகுதியில் நிலம் வாங்கமுடியாது என்றோ வாழக்கூடாது என்றோ பெரும்பான்மைச் சிங்கள மக்கள் கூறமுடியாது —

தெரிவுக்குழு மூலம் தீர்வு வராது

சர்வகட்சி மாநாடுகள், நாடாளுமன்றத் தெரிவுக் குழுக்கள் ஆகியன எல்லாம் வெறும் வெற்றுச் செயற்பாடுகளே. இவ் விடயங்களில் ஒவ்வொருவரும் ஒவ்வொன்றைச் செல்லிக் கொண்டிருப்பார்கள். ஏதாவது நடைபெற வேண்டுமானால் இந்நாட்டின் தலைவர் பெரும்பான்மை மக்களால் ஒப்புக் கொள்ளப்பட்ட தீர்வை முன் வைக்க வேண்டும். அதற்கு அவர் பெரும்பான்மை மக்கள் மத்தியில் நம்பிக்கை பெற்றவராக இருக்க வேண்டும்.

ஆனால் இன்றுள்ள நிலையில் பெரும்பான்மை இனம் பிளவுண்டு கிடக்கிறது. ஆகையால் இந்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஊடாக எதுவுமே நடைபெறாது எனபதை மனவருத்தத்துடன் கூற வேண்டி உள்ளது — என்றும் திரு. காமினி திசநாயக்கா தமது பேட்டியில் கூறியுள்ளார். [அ]

வடக்கில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தத்தை விரைவில் முடிவுக்குக் கொண்டு வரக்கூடியதான தீர்வு ஒன்று காணப்படவேண்டும். இந்த யுத்தம் நிறுத்தப்பட்டால் யுத்தத்துக்கு செலவிடப்படும் பணத்தை வறிய மக்களின் அபிவிருத்திக்காக பயன்படுத்தமுடியும் என்றார். [இ-எ]

பீரங்கித் தாக்குதலில் சிறுவன் படுகாயம்

ஏற்றி வந்த வாகனமும் விபத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 24

உடுத்துறை கடற் பிராந்தியத்தில் இருந்து நேற்று மாலை கரையோரப் பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதல் மேற் கொண்டனர். இச்சம்பவத்தில் ஒரு சிறுவன் படுகாயமடைந்தான். சில வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இச்சம்பவத்தில் உடுத்துறை வேம்படியைச்சேர்ந்த யோகேசி சந்திரன் பிரகதன் [வயது 12] என்ற சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்த சிறுவனை ஆஸ்பத்திரிக்கு எடுத்து வந்த வான் புதுக்காட்டுப் பகுதி கண்டி வீதியில் சைக்கிள் ஒன்றுடன் மோதியது.

சைக்கிளில் சென்ற டானி மாசாரை சேர்ந்த அந்தோனிப்பிள்ளை தேவசகாயம் [வயது 33] என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

ஷெல் தாக்குதலில் காயம் அடைந்த சிறுவனும் விபத்தில் காயம் அடைந்த சைக்கிளோட்டியும் மற்றும் ஒரு வாகனம் மூலம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்டனர். [இ-15]

எழுதுநர்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யில் மொழி அல்லது இலக்கியத்துடன், எண்ணிலும் அல்லது கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் ஆகியவை உட்பட 4 திறமைச்சித்திகளுடன் 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கலாம்.

அரசாங்க, மாகாண சேவைகளில் உள்ள வெற்றிடங்களுக்கு 18-40 வயதுக்கு இடைப்பட்டவர்களும், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட அமைப்புகளுக்கு 18-35 வயதுக்கு இடைப்பட்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் ஆகஸ்ட் 7 ஆம் திகதியாகும்.

யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் உட்பட நாட்டின் சகல பகுதிகளிலும் இப் போட்டிப்பரீட்சை நடைபெறும்.

சுருக்கெழுத்தாளர் தட்டெழுத்தாளர்

இதேவேளை—

அரசாங்க சேவைக்கும், மாகாண சபைக்கும் சுருக்கெழுத்தாளர்களையும் தட்டெழுத்தாளர்களையும் ஆட் சேர்ப்பதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையும் நடைபெற உள்ளது.

ஜி. சி. ஈ. சாதாரண தரம் அல்லது தே. பொ. க. சா. [என். சி. ஜி ஈ] பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற் படாமல் தமிழ் அல்லது ஆங்கிலம், அல்லது சிங்களம் ஒரு பாடமாக 6 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

வயதெல்லை 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

மேற்படி வர்த்தமானி அறிவித்தலின் பிரதியை இல 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதியில் அமைந்துள்ள உதயன் விளம்பரப் பணிமனையில் பார்வையிடலாம். [த]

தெரிவுக் குழு..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பெரும்பான்மை இனத்துக்கு முக்கியத்துவம் அளிக்கும் அதேவேளையில் சிறுபான்மையினரின் உரிமைகளை நாம் மறந்துவிட முடியாது.

சமஷ்டி ஆட்சி முறை இந்தியாவிலும் அமெரிக்காவிலும் நன்கு செயற்படுகிறது.

அவ்வேளையில் —

நீங்கள் சமஷ்டி ஆட்சி முறையை ஆதரிக்கிறீர்களா? — என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சிறிபால டி சில்வா குறுக்கிட்டுக் கேள்வி எழுப்பினார். 'நிச்சயமாக ஆதரிக்கிறேன்' என அப்போது திரு. ரணசிங்க பதிலளித்து விட்டு தனது உரையை தொடர்ந்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக் குழு இந்தப் பிரச்சினையை தீர்க்கப் போவதில்லை. அதில் பங்கு கொள்ளும் கட்சிகள் அரசியல் இலாபம் தேடவே முனைகின்றன. எனவே அதன் மூலம் ஒரு போதும் தீர்வு கிடைக்கும் என எதிர்பார்த்திருக்க முடியாது என்று தெரிவித்தார்.

நன்றி நவிலல்

தோற்றம்: 19 — 03 — 1929

மறைவு: 19 — 07 — 1992

திருமதி றோசம்மா யோசப்

(யோகம்)

அன்னாரின் மரணச் சடங்கில் பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காக 25-7-92 சனிக் கிழமை காலை 6-30 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் நிகழவிருக்கும் இரங்கற் திருப்பலியில் கலந்து கொள்ளுமாறும் அன்புடன் அழைக்கின்றோம்

—கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

42, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

[21874]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org